செய்தி வெளியீடு எண்:515 நாள்: 07.08.2017

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (7.8.2017) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் 7 கோடியே 70 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 80 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார். மேலும், 24 கோடியே 46 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான காவல்துறை கட்டடங்களை திறந்து வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் 7 கோடியே 70 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 80 காவலர் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், தருமபுரி மாவட்டம் – பென்னாகரத்தில் 15 குடியிருப்புகள், மதுரை மாவட்டம் – திருப்பரங்குன்றத்தில் 25 குடியிருப்புகள், தேனி மாவட்டம் – உத்தமபாளையத்தில் 30 குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – வள்ளியூரில் 45 குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டம் – விருதுநகர் மேற்கில் 33 குடியிருப்புகள், என 18 கோடியே 65 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 148 காவலர் குடியிருப்புகள்;

சென்னை பெருநகரம், T-15 எஸ்.ஆர்.எம்.சி. ஐயப்பன்தாங்கல் மற்றும் ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலையம், தஞ்சாவூர் மாவட்டம் – வல்லம் அனைத்து மகளிர்

காவல் நிலையம் மற்றும் செங்கிப்பட்டி, திருவண்ணாமலை மாவட்டம் – அனக்காவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – பாரத மிகு மின் நிறுவனம் (BHEL) ஆகிய இடங்களில்
4 கோடியே 10 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 காவல் நிலையங்கள்;

சென்னை பெருநகரம்– புனித தோமையார் மலையில் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை இணை ஆணையர் தெற்குக்கான நிர்வாகக் கட்டடம்;

என மொத்தம் 32 கோடியே 16 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 228 காவலர் குடியிருப்புகள், 6 காவல் நிலையங்கள் மற்றும் இணை ஆணையர் தெற்குக்கான நிர்வாகக் கட்டடம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழக தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. விஜய்குமார், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 7.8.2017**